**சுருக்கம்**

சிவகாசி நகராட்சி – விரிவாக்கம் – திருத்தங்கல் நகராட்சியினை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

அரசாணை (நிலை)எண்.148 **நாள்: 31.12.2020**

**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**சார்வரி, மார்கழி –16**

**படிக்கப்பட்டது:**

1. சிவகாசி நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5679/2017/எப்.1, நாள் 01.12.2020.
2. நகராட்சி நிர்வாக ஆணையரது கடித ந.க.எண்.22501/2020/எம்3, நாள் 03.12.2020 மற்றும் 10.12.2020.

******

**ஆணை :**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.10.2017 அன்று விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் சிவகாசி சிறப்புநிலை நகராட்சி, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்தார்கள்.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சிவகாசி நகராட்சி – தொழில் வளம் மற்றும் மனித வளம் நிறைந்த நகரமாக இருப்பதால், இந்திய திருநாட்டின் அனைத்து பகுதி மக்களாலும் “குட்டி ஜப்பான்” என்று அழைக்கப்பட்டு வருகிறது என்றும், சிவகாசி நகராட்சியானது 01.10.1920–ம் தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டு பின்னர் 21.08.1971–ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், பின்னர் 01.10.1978–ம் தேதி முதல், முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு, 28.05.2013–ம் தேதி முதல் சிறப்புநிலை நகராட்சியாக இயங்கி வருகிறது என்றும், அவ்வகையில், 100 ஆண்டுகளை கடந்த நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் நகராட்சியாக, சிவகாசி நகராட்சி, மக்கள் பணியில் தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என சிவகாசி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகராட்சிகளின் பரப்பளவு முறையே 6.89 ச.கி.மீ மற்றும் 13.00 ச.கி.மீ என்றும், மக்கள் தொகை முறையே 71040 மற்றும் 55,362 என்றும், தற்போதைய மக்கள் தொகை முறையே 78000 மற்றும் 60,000 எனத் தெரிவித்துக்கொண்டு சிவகாசி நகராட்சியும், திருத்தங்கல் நகராட்சியும் மாநில நெடுஞ்சாலை எண்.SH42–ல் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏற்றவாறு இருக்கும்